நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.

மன்ற கூட்ட அறிவிப்பு

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் 31.01.2019 ஆம் நாள் வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது.மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி.

பொருள் எண் 1

இந்நகரில் பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களில் உள்ள கழிவு நீர் தொட்டி (செப்டிங் டேங்) முழுமையாக நிரம்பி வெளியேறியதால், இக்கழிவுகளை பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடன் அகற்றிட ஆகும் தோராய செலவினம் ரூ.22,000/-க்கு (ரூபாய் இருபத்தி இரண்டு ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுவதுடன்,

இச்செலவினத் தொகையினை இவ்வலுவலக துப்புரவு பணிமேற்பார்வையாளரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகளுக்கான செலவினத் தொகை வழங்கப்பட்டதால், அன்னாருக்கு வழங்கிடவும் வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ளப்பட்டதையும் இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.126/12/ H1

பொருள் எண் 2

இந்நகரின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22ல் உள்ள ஈ.வெ.ரா. பெரியார் தெருவில் உள்ள நகராட்சி பூங்காவில் பெரிய பாழடைந்த கிணறு உள்ளது. இக்கிணறால் பல்வேறு உயிர் இழப்புகள் ஏற்படாமல் இருக்க இக்கிணற்றை மூடிடவும், உடன் பாதுகாப்புக்காக தடுப்பு சுவர்கள் அமைத்திடவும், இவைக்காகும் தோராய செலவு ரூபாய் [JCP மற்றும் டிப்பர் லாரிகள் வாடகைக்கு அமர்த்தி பணியினை மேற்கொள்ள] 1,70,000/-க்கு(ரூபாய் ஒரு இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாரார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும், இவைக்கான செலவினத் தொகையையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.126/12/ H1

1. [illegible]

2. [illegible]

பொருள் எண் 3

இந்நகரின் எல்லைக்குட்பட்ட வார்டு-22இல் உள்ள ஈ.வெ.ரா. பெரியார் தெருவில் உள்ள நகராட்சி பூங்காவில் பெரிய பாழடைந்த கிணறு உள்ளது. இக்கிணற்றில் தடுப்பு சுவர் இல்லாமையால் உயிர் சேதம் ஏற்படாமல் தடுக்க இக்கிணற்றினை JCB மற்றும் டிப்பர் லாரிகளை கொண்டு அக்கிணற்றினை மண் கொண்டு மூடிட விருப்பம் உள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளியினை 10.01.2019ஆம் தேதி கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை மன்ற அங்கீகாரத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

வரிசை எண்	நிறுவனம்/ சப்ளை செய்யப்படவேண்டியது JCB /டிப்பர் லாரி	1 மணிக்கு / நாள் வாடகையாக மொத்த செலவினத் தொகை ரூபாய்
1	திரு. P. ரவி மாநில ஒப்பந்ததாரர் 53, நேரு தெரு, செய்யாறு.	JCB - 1 மணிக்கு - ரூ.1450/- டிப்பர் லாரி 1 மணிக்கு - ரூ.2600/-
2	திரு. K. பிரகாஷ் ஒப்பந்ததாரர் 25/17, முகம்மது பேட்டை, செய்யாறு.	JCB - 1 மணிக்கு - ரூ.1700/- டிப்பர் லாரி 1 மணிக்கு ரூ.2600/-
3	திரு. A. தனசேகரன் ஒப்பந்ததாரர் 67/22, குமரன் தெரு, செய்யாறு	JCB - 1 மணிக்கு - ரூ.1600/- டிப்பர் லாரி 1 மணிக்கு ரூ.2650/-

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்-1ல் உள்ள திரு. P. ரவி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாராரா அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும். இவைக்கான செலவினத் தொகையையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.126/12/ H1

பொருள் எண் 4

இந்நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தகுதியுடைய பணியாளர்களுக்கு அரசு விதி முறைகளின்படி சீருடைகள் மற்றும் இவைகளுக்கான தையல் கூலியாக வழங்கிட ஆகும் தோராய செலவினத் தொகையாக ரூ.1,28,000/-க்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. இந்நிலையில் இப்பணிக்கு மொத்த செலவினமாக ரூ.1,64,526/- செலவு ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்வாறு ஏற்ப்பட்டுள்ள கூடுதல் செலவினத் தொகை ரூ.36,526/-க்கு

3. [illegible]

4. [illegible]

அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3465/18/ H1

பொருள் எண் 5

இந்நகர் பகுதியில் சேகரமாகும் திடக்கழிவுகளை உடனுக்குடன் அகற்றிட போதிய நிரந்தர துப்புரவு பணியாளர் இல்லாமையால் இந்நகராட்சியன் நாம்ஸ் அடிப்படையில் குறைவாக உள்ள 85 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் - திருவண்ணாமலை அவர்களின் தினக்கூலி அடிப்படையிலான ஊதிய விகிதத்தில் பணி அமர்த்தி பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் - சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.2551/18/ H1 நாள்: 08.10.2018-ல் கோரப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் - சென்னை அவர்கள் k.Dis –No. 30813/J3/18 நாள்: 11.12.2018 -ஆம் தேதியில் சுமார் 85 எண்ணிக்கையிலான தினக்கூலி அடிப்படையிலான துப்புரவு பணியாளர்களை பணியில் அமர்த்தி திடக்கழிவு பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை நடைமுறைப்படுத்திடவும் இப்பணிக்காகும் செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1137/17/ H1

பொருள் எண் 6

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN25U3766 – என்ற வாகனத்திற்கு 2019-2020ஆம் ஆண்டுக்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதாலும், மேலும் இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் இதர செலவினத் தொகை தோராயமாக ரூ.1.35 இலட்சம்(ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி ஐந்து ஆயிரம் மட்டும்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணி மேற்கொள்ளவும், இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.146/19/ H1

பொருள் எண் 7

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN25U8388 – என்ற வாகனத்திற்கு 2019-2020ஆம் ஆண்டுக்கான தகுதி சான்று பெற வேண்டியுள்ளதாலும், அதன் பொருட்டு இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் இதர பழுதுகளை சரிசெய்திட ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு(ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்)மன்ற அனுமதி

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணி மேற்கொள்ளவும், இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.126/19/ H1

பொருள் எண் 8

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்-12. அவர்களின் ஆய்வுக் கூட்ட தகவலின்படி இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் தினசரி வருகைப்பதிவு மற்றும் நகராட்சி பணியாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை ஆகியவற்றை தயார் செய்யவும் ஆகும் தோராய செலவு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

அலுவலகக் குறிப்பு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அ) அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் வருகைப்பதிவை ஆன்லைன் மூலம் (Bio-metric) பதிவு செய்யவும்

ஆ) அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் அடையாள அட்டை தயார் செய்யவும்

தனித்தனியாக விலைப்புள்ளிகளை பெற்று பணியை செய்து முடிக்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.608/2019/ C1

பொருள் எண் 9

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN25U3765 – என்ற வாகனத்திற்கு 2019-2020ஆம் ஆண்டுக்கான தகுதி சான்று பெற வேண்டியுள்ளதாலும், அதன் பொருட்டு இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் இதர செலவினங்களுக்கும் ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.1.35 இலட்சத்துக்கு (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி ஐந்து ஆயிரம் மட்டும்)மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும், இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.146/19/ H1

பொருள் எண் 10

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் உள்ள TN25U3764 – என்ற வாகனத்திற்கு 2019-2020ஆம் ஆண்டுக்கான தகுதி சான்று பெற வேண்டியுள்ளதாலும், மேலும் அவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் இதர செலவினங்களுக்கும் ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.1.35 இலட்சத்துக்கு (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி ஐந்து ஆயிரம் மட்டும்)மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொண்டதையும், இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

பொருள் எண்:11

திருவத்திபுரம் நகராட்சியில் கல்வி நிதி 2018–2019ன் கீழ் கீழ்க்கண்ட நகராட்சி பள்ளிகளுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.விவரம்

வ. எண்.	பணியின் விவரம்	மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்)
1.	ஆற்றங்கரை தெரு நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	3.10
2.	குமரன் தெரு நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	2.25
3.	கிரிதரன்பேட்டை நகராட்சி உயர்நிலைப்பள்ளி புதிய கட்டிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	6.25
4.	முஸ்லீம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	2.50
5.	பரிதிபுரம் கிழக்கு நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	0.60
6.	கிரிதரன்பேட்டை நகராட்சி உயர்நிலைப்பள்ளி பழைய கட்டிடம் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	1.75
7.	பரிதிபுரம் மேற்கு நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	2.25
8.	கொடநகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	3.75
9.	டாக்டர் அம்பேத்கார் நகர் நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	2.10
10.	கிரிதரன் பேட்டை நகராட்சி துவக்க பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	2.25
11.	வெங்கட்ராயன்பேட்டை நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	2.80
12.	வழூர்பேட்டை நகராட்சி பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்	3.50

மேற்படி பணிகளுக்கான செலவினத்தை நகராட்சியின் ஆரம்ப கல்வி நிதி 2018–2019 கீழ் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:191–2018–இ1

பொருள் எண்:12

[illegible] மூலம் மேற்கொள்ளப்பட்ட

11. Boyle ప్రయోగము.

செய்ததின் அடிப்படையிலும் , பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்காணும் விவரப்படி விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான பட்டியல் வரப்பட்டுள்ளது.

வ.எண்	நிறுவனத்தின் பெயர் மற்றும் விளம்பரம் நாள்	தொகை .ரூ
1.	Express Publications (Madurai) Ltd (தினமணி நாளிதழ்)விளம்பரம் நாள்:15.01.2019	ரூ.18900–
2.	KAL Publications(P) Ltd(தினகரன் நாளிதழ்) விளம்பரம் நாள்:15.01.2019	ரூ.23,100–
3.	KAL Publications(P) Ltd(தமிழ் முரசு நாளிதழ்) விளம்பரம் நாள்:15.01.2019	ரூ.15,750–
4.	தினமலர் நாளிதழ், வேலூர் விளம்பரம் நாள்:15.01.2019	ரூ.20160–
5.	தினத்தந்தி நாளிதழ், வேலூர் விளம்பரம் நாள்:15.01.2019	ரூ.20,160–
6.	மாலை மலர் நாளிதழ் விளம்பரம் நாள்:14.01.2019	ரூ.9975–

மேற்படி கேட்புப் பட்டியல் தொகைகளை உரிய நிறுவனங்களுக்கு வழங்க ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:2308–2018–இ1

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி.